# 25 தலங்களுக்குரிய
# நலம் தரும் பதிகங்கள்




**திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்**

2, லாசன்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-620 001.

✆ 0431 - 2461415

₹ 10

# முன்னுரை

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம் வெளியிட்டுள்ள குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108 (பாகம்1 & 2) புத்தகங்களைப் படித்து பயன் பெற்று வரும் அன்பர்கள் பலரும், அத்தலங்களுக்குரிய தேவார, திருவாசகப் பாடல்களை பாராயணம் செய்ய விருப்பம் தெரிவித்ததன் காரணத்தால், அவர்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பிட்ட 25 தலங்களுக்குரிய திருப்பதிகங்கள் ஓதுவார் அவர்களால் பாடப் பெற்று C.D. வடிவில் வழங்கியுள்ளோம்.

அன்பர்கள் பதிகங்களில் உள்ள எல்லாப் பாடல்களையும் பாராயணம் செய்து பயன் பெறுக!

**ஸ்ரீ ஐயப்ப சங்கத்தினர்**

## 1. தீராத நோய்கள் தீருவதற்கு வழிபட வேண்டிய தலம்

### திருநெடுங்களம்

### திருஞான சம்பந்தர் தேவாரம்

நின் அடியே வழிபடுவான், நிமலா, நினைக்கருத,
‘என் அடியான் உயிரை வவ்வேல்’ என்று அடற்கூற்று உதைத்த
பொன் அடியே பரவி, நாளும் பூவோடு நீர்சுமக்கும்
நின் அடியார் இடர்களைவாய், நெடுங்களம் மேயவனே.

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழும் மா மறுகின் சிரபுரக் கோன், நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார், பாவம் பறையுமே.

## 2. சர்க்கரை நோய் குறைய, கட்டுப்பாட்டிலிருக்க வழிபட வேண்டிய தலம்

## கோவில்வெண்ணி

### திருநாவுக்கரசர் தேவாரம்

முத்தினைப் பவளத்தை முளைத்த எம்
தொத்தினைச் சுடரைச் சுடர் போல் ஒளிப்
பித்தனைக் கொலும் நஞ்சினை வானவர்
நித்தனை நெருதல் கண்ட வெண்ணியே

இலையின் ஆர் கொன்றை சூடிய ஈசனார்
மலையினால் அரக்கன் திறல் வாட்டினார்
சிலையினால் மதில் எய்தவன் வெண்ணியைத்
தலையினால் தொழுவார் வினை தாவுமே

## 3. இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தவும், இதய நோய் குணமாகவும் வழிபட வேண்டிய தலம்

### அன்னியூர்

**திருநாவுக்கரசர் தேவாரம்**

ஞானம் காட்டுவர் நன்நெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம் அடைந்தார்க்கெலாம்
தானம் காட்டித் தன் தாள் அடைந்தார்கட்கு
வானம் காட்டுவர்போல் வன்னியூரரே.

இம்மை அம்மை என இரண்டும் இவை
மெய்ம்மைதான் அறியாது விளம்புவர்
மெய்ம்மையால் நினைவார்கள்தம் வல்வினை
வம்மின் தீர்ப்பர்கண்டீர் வன்னியூரரே.

## 4. தீராத வயிற்றுவலி மற்றும் குடல் தொடர்பான நோய்கள் நீங்கிட வழிபட வேண்டிய தலம்

### திருவதிகை

### திருநாவுக்கரசர் தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

போர்த்தாயங்கொ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால் வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூழ்அதி கைக்கெ டில
வீரட்டா னத்துறை அம்மானே.

## 5. கோமாவிலிருந்து மீண்டெழவும், காக்கை வலிப்பு குணமாகவும் வழிபட வேண்டிய தலம்

### திருவாசி

### திருஞானசம்பந்தர் தேவாரம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சுடை சுற்றி முடித்துப்
பணி வளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆர் இடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம்எலாம் செய்து பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே.

அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத்து உறைகின்ற
புகை மலி மாலை புனைந்து அழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நல்தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண்தமிழ் கொண்டு இவை ஏத்தச்
சாரகிலா வினைதானே.

# 6. புற்று நோய் குணமாக வழிபட வேண்டிய தலம்

## நண்டாங்கோயில் எனப்படும் திருந்துதேவன்குடி

### திருஞானசம்பந்தர் தேவாரம்

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர்தேவு எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே.

சேடர் தேவன்குடித் தேவர்தேவன்தனை
மாடம் ஓங்கும் பொழில் மல்கு தண் காழியான்
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன்
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லைஆம் பாவமே.

## 7. எலும்புமுறிவு குணமடைய, இளம்பிள்ளைவாதம், பக்கவாதம் ஆகிய நோய்கள் தீருவதற்கு வழிபட வேண்டிய தலம்

## திருமாகறல்

**திருஞானசம்பந்தர் தேவாரம்**

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்,
மங்குலொடு நீள் கொடிகள் மாடம்மலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்கு விரி கொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே.
கடைகொள் நெடு மாடம் மிக ஓங்குகமழ்
வீதி மலி காழியவர் கோன்,
அடையும் வகை யால், பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்,
மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடையதமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே.

## 8. விஷக்கடியிலிருந்து குணம்பெற வழிபட வேண்டிய தலம்

## பூவனூர்

### திருநாவுக்கரசர் தேவாரம்

பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினார்
பாவம் ஆயின பாறிப் பறையவே
தேவர்கோவினும் செல்வர்கள் ஆவரே.

நாரணன்னொடு நான்முகன் இந்திரன்
வாரணன் குமரன் வணங்கும் கழல்
பூரணன் திருப் பூவனூர் மேவிய
காரணன் எனை ஆள்உடைக் காளையே

## 9. கண்களில் வரும் நோய்கள் அகலவும் குறிப்பாக இடதுகண் பார்வை பெறவும் வழிபட வேண்டிய தலம்

### காஞ்சிபுரம்

### சுந்தரர் தேவாரம்

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானை
பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக்
காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன், கம்பன், கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திரு நாவல் ஆருரன்
நற்றமிழ் இவை ஈர்ஐந்தும் வல்லார்
நன்னெறி உலகு எய்துவர்தாமே.

## 10. வலதுகண் பார்வை பெறுவதற்கு வழிபட வேண்டிய தலம்

### திருவாரூர்

### சுந்தரர் தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி,
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர்? திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத்து எண்தோள் முக்கண்
கலைகள் பலஆகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆருரன்
பாரூர் அறிய, என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்,
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர்
வாழ்ந்து போதீரே.

## 11. களவு போன பொருள் கிடைக்கவும், ஏவல், பில்லி சூனியம் நீங்கவும் வழிபட வேண்டிய தலம்

### திருமுருகன்பூண்டி

### சுந்தரர் தேவாரம்

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டு எனக் குத்திக் கூறை கொண்டு
ஆறலைக்கும் இடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இடுகு நுண்இடை மங்கைதன்னொடும்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே.

முந்தி வானவர்தம் தொழும் முருகன்
பூண்டி மா நகர்வாய்ப்
பந்து அணைவிரல் பாவைதன்னை ஓர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையில் சிவதொண்டன்ஊரன்
உரைத்தனபத்தும் கொண்டு
எம்தம் அடிகளை ஏத்துவார் இடர்
ஒன்றும் தாம் இலரே.

# 12. எமபயம் நீங்குவதற்கு வழிபட வேண்டிய தலம்

## திருவாஞ்சியம்

### திருநாவுக்கரசர் தேவாரம்

படையும் பூதமும் பாம்பும் புல்வாய் அதள்
உடையும் தாங்கிய உத்தமனார்க்கு இடம்
புடை நிலாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க்கு அல்லல் ஒன்று இல்லையே.

அருக்கன் அங்கி யமனொடு தேவர்கள்
திருத்தும் சேவடியான் திகழும் நகர்
ஒருத்தி பாகம் உகந்தவன் வாஞ்சியம்
அருத்தியால் அடைவார்க்கு இல்லை அல்லலே.

## 13. நோயின் கடுமை தாங்கிக் கொள்ள இயலாதவர்கள் வழிபட வேண்டிய தலம்

### திருவைகாவூர்

### திருஞானசம்பந்தர் தேவாரம்

கோழை மிடறு ஆக கவி கோளும்
இலவாக இசை கூடும்வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவைசொன
சொல் மகிழும் ஈசன் இடமாம்
தாழை இளநீர் முதியகாய் கமுகின்
வீழ நிரை தாறு சிதறி
வாழை உதிர் வீழ் கனிகள் ஊறி வயல்
சேறு செயும் வைகாவிலே.

முற்றும் நமை ஆள்உடைய முக்கண்
முதல்வன் திரு வைகாவில் அதனைச்
செற்ற மலினார் சிரபுரத் தலைவன்
ஞானசம்பந்தன் உரைசெய்
உற்ற தமிழ்மாலை ஈர் ஐந்தும்
இவை வல்லவர் உருத்திரர் எனப்
பெற்று அமர லோகம் மிக வாழ்வர்
பிரியார் அவர் பெரும் புகழொடே.

# 14. ராகுதோஷ பாதிப்பு நிவர்த்தியாக வழிபட வேண்டிய தலம்

## திருநாகேஸ்வரம்

### திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் தேவாரம்

காளமேகம்நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுஉறின்
நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சுரம் நண்ணுவார்
கோளும் நாளும் தீயவேனும் நன்கு ஆம் குறிக்கொண்மினே.

நல்லர் நல்லது ஓர் நாகம் கொண்டு ஆட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்இல்ஓடு கை ஏந்திப் பலி திரி
செல்வர்போல் திரு நாகேச்சரவரே.

சந்திரன்னொடு சூரியர்தாம் உடன்
வந்து சீர் வழிபாடுகள் செய்தபின்
ஐந்தலைஅரவின் பணி கொண்டு அருள்
மைந்தர்போல் மணி நாகேச்சரவரே.

# 15. சனிதோஷ பாதிப்பு விலகுவதற்கு வழிபட வேண்டிய தலம்

## திருநள்ளாறு

### திருஞானசம்பந்தர் தேவாரம்

போகம்ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன் அகலம்
பாகம் ஆர்த்த பைங்கண்வெள்ஏற்று அண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோல்உடையன் கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல் பத்தும்இவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே.

## 16. செவ்வாய் தோஷ பாதிப்பு நீங்கிட வழிபாடு செய்ய வேண்டிய தலம்

### வைத்தீஸ்வரன் கோயில்

### திருஞானசம்பந்தர் தேவாரம்

கள் ஆர்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள் ஆர்ந்த சடைமுடி எம்பெருமானார் உறையும் இடம்
தள்ளாய சம்பாதி சடாயு என்பார்தாம் இருவர்
புள் ஆனார்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூரே.

செடி ஆய உடல் தீர்ப்பான் தீவினைக்கு ஓர் மருந்து ஆவான்
பொடிஆடிக்கு அடிமை செய்த புள்ளிருக்குவேளூரைக்
கடிஆர்ந்த பொழில் காழிக் கவுணியன் சம்பந்தன் சொல்
மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லைஆம் மறுபிறப்பே.

# 17. சுக்கிரதோஷ பாதிப்பு விலகுவதற்கு வழிபட வேண்டிய தலம்

## கஞ்சனூர்

### திருநாவுக்கரசர் தேவாரம்

நெருப்பு உருவத்திருமேனி வெண்நீற்றானை
நினைப்பார்தம் நெஞ்சானை நிறைவு ஆனானைத்
தருக்கு அழிய முயலகன்மேல் தாள் வைத்தானைச்
சலந்தரனைத் தடிந்தோனைத் தக்கோர் சிந்தை,
விருப்பவனை விதியானை வெண்நீற்றானை
விளங்கு ஒளியாய் மெய்யாகி மிக்கோர் போற்றும்
கருத்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு உய்ந்தேனே

## 18. கல்வியில் மந்தம், கவனக்குறைவு, ஞாபகசக்தி குறைபாடு நீங்குவதற்கு வழிபட வேண்டிய தலம்

## திருவெண்காடு

### திருஞானசம்பந்தர் தேவாரம்

கண் காட்டும் நுதலானும் கனல்
காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும்
பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும்
விடை காட்டும் கொடியானே.

பேய் அடையா பிரிவு எய்தும்
பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர், ஐயுற
வேண்டா ஒன்றும்,
வேயனதோள் உமைபங்கன்
வெண்காடு முக்குள நீர்
தோய்வினையார் அவர் தம்மைத்
தோயாவாம் தீவினையே

## 19. பிறந்து வெகுநாட்களாகியும், சரியாக பேச்சு வராமல் இருக்கும் குழந்தைகளும், அதிர்ச்சியில் பேசும்தன்மை இழந்தவர்களும் குணமடைய வழிபட வேண்டிய தலம்

## திருக்கோலக்கா

### திருஞானசம்பந்தர் தேவாரம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்
சடையும் பிறையும் சாம்பல்பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ

நலம்கொள் காழி ஞான சம்பந்தன்
குலம்கொள் கோலக்கா உளானையே
வலம்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலம்கொள் வினை போய் ஓங்கி வாழ்வரே.

## 20. தடைபட்ட திருமணம் உடனடியாக நடைபெற வழிபாடு செய்ய வேண்டிய தலம்

### திருமணஞ்சேரி

### திருநாவுக்கரசர் தேவாரம்

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார் வண்ணம் வாழ்த்துமே.

கடுத்த மேனி அரக்கன் கயிலையை
எடுத்த வன்நெடு நீண்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே

## 21. கரு உண்டாகவும், கருகாத்து, கருச்சிதைவு ஏற்படாமலிருக்கவும் வழிபட வேண்டிய தலம்

### திருக்கருகாவூர்

### திருஞானசம்பந்தர் தேவாரம்

பண்ணின் நேர்மொழியாளையொர் பாகனார்
மண்ணு கோலம்உடை அம்மலரானொடும்
கண்ணன் நேட அரியார் கருகாவூர்எம்
அண்ணல் வண்ணம் அழலும் அழல் வண்ணமே.

கலவ மஞ்ஞை உலவும் கருகாவூர்
நிலவு பாடல் உடையான் தன் நீள்கழல்
குலவு ஞானசம்பந்தன் செந்தமிழ்
சொலவலார் அவர் தொல்வினை தீருமே.

## 22. சுகப்பிரசவத்திற்கான பிரார்த்தனைத் தலம்

### திருச்சிராப்பள்ளி

### திருஞானசம்பந்தர் தேவாரம்

நன்று உடையானைத் தீயது இலானை நரை வெள்ளேறு
ஒன்று உடையானை உமை ஒருபாகம் உடையானைச்
சென்று அடையாத திரு உடையானைச் சிராப்பள்ளிக்
குன்று உடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே!

தேன் நயம்பாடும் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கு ஏறும் கழுமல ஊரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவை வல்லார்
வான சம்பந்தத்து அவரொடு மன்னி வாழ்வாரே.

## 23. மாங்கல்ய தோஷம் நிவர்த்தியடைய வழிபட வேண்டிய தலம்

### திருவேள்விக்குடி

### திருஞானசம்பந்தர் தேவாரம்

புரிதரு சடையினர் புலிஉரி
அரையினர் பொடி அணிந்து
திரிதரும் இயல்பினர் திரி
புரம்மூன்றையும் தீ வளைத்தார்
வரி தரு வனமுலை மங்கையொடு
ஒருபகல் அமர்ந்தபிரான்
விரிதரு துருத்தியார் இரவு இடத்து
உறைவர் வேள்விக்குடியே.

விண் உலாம் விரி பொழில் விரை
மணல் துருத்தி வேள்விக்குடியும்
ஒண் உலாம் ஒலிகழல் ஆடுவார்
அரிவையோடு உறை பதியை
நண் உலாம் புகலியுள் அருமறை
ஞானசம்பந்தன் சொன்ன
பண் உலாம் அருந்தமிழ் பாடுவார்
ஆடுவார் பழிஇலரே.

## 24. கடன் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு பிரார்த்தனை செய்ய வேண்டிய தலம்

### திருச்சேறை

### திருஞானசம்பந்தர் தேவாரம்

முறி உறு நிறம் மல்கு முகிழ்முலை மலைமகள் வெருவ முன்
வெறி உறு மதகரி அதள்பட உரிசெய்த விறலினர்
நறி உறும் இதழியின்மலரொடு நதி மதி நகுதலை
செறிஉறு சடைமுடி அடிகள்தம் வள நகர் சேறையே.

கற்ற நல்மறை பயில் அடியவர் அடிதொழு கவின்உறு
சிற்றிடையவளொடும் இடமென உறைவது ஓர் சேறைமேல்
குற்றம்இல் புகலியுள் இகல் அறு ஞானசம்பந்தன
சொல் தகவு உறமொழிபவர் அழிவு இலர் துயர் தீருமே.

## 25. பிறவி ஊமைகளும், திக்குவாய் உள்ளவர்களும் பேச்சாற்றல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புகிறவர்களும் வழிபட வேண்டிய தலம்

## திருப்பேணு பெருந்துறை

**மாணிக்கவாசகரின் திருவாசகம்** (20 பாடல்கள்)

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. (1)

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. (2)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயிமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ (3)

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. (4)

தக்கனையும எச்சனையும் தலையறுத்துத் தேவர் கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி
அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினங்காண் சாழலோ
(5)

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருத்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ. (6)

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலனேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ. (7)

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. (8)

தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (9)

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள் காண் சாழலோ.

(10)

(குறிப்பு : மீதமுள்ள 10 பாடல்களையும் சேர்த்து
பாராயணம் செய்தல் நன்று)

## வாழ்த்து

### கந்தபுராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108 முதல் பாகம் மற்றும் இரண்டாம் பாகம் கோயில் புத்தக நிலையத்தில் கிடைக்கும்.

| பாடல் | ராகம் | பாடல் | ராகம் |
|---|---|---|---|
| 1 | ஆரபி | 14 | ரேவதி |
| 2 | மலையமாருதம் | 15 | ஆரபி |
| 3 | சரஸ்வதி | 16 | நாதநாமக்கிரியா |
| 4 | நவரோஸ் | 17 | அரிகாம்போதி |
| 5 | காம்போதி | 18 | சகானா |
| 6 | நாட்டைக் குறிச்சி | 19 | காம்போதி |
| 7 | பந்துவராளி | 20 | தேஷ் |
| 8 | இந்தோளம் | 21 | பைரவி |
| 9 | காம்போதி | 22 | அரிகாம்போதி |
| 10 | மத்தியமாவதி | 23 | நவரோஸ் |
| 11 | சங்கராபரணம் | 24 | மத்தியமாவதி |
| 12 | சாரங்கா | 25 | மோகனம் |
| 13 | பந்துவராளி | வாழ்த்து: | மத்தியமாவதி |



## AUDIO CD

இப்புத்தகத்தில் அடங்கியவை Audio CD வடிவில்
Book Stall ல் விற்பனைக்கு உள்ளது.